**அ.வ.எண்.199/2021**
**வா.சா.1 : சிவக்குமார்**
**தேதி : 22.08.2025**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் முதுகலை படித்துள்ளேன். தமிழ், ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியும். இந்த வழக்கில் நான் மூன்றாம் தரப்பினர். என் தாயாருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். என் தாயார் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். என் தாயார் எனக்கு வழக்கை நடத்துவதற்கு பவர் ஆஃப் அட்டார்னி எழுதிக்கொடுத்துள்ளார். நீங்கள் இந்த வழக்கில் அந்த பவர் ஆஃப் அட்டார்னியை தாக்கல் செய்துள்ளீரா என்றால் என் வழக்கறிஞரைத்தான் கேட்க வேண்டும். வழக்கு சொத்தை ஒட்டியுள்ள சொத்து எனக்கு பாத்தியமான சொத்து. 1 ஆம் பிரதிவாதி சொத்து வழியாகத்தான் உங்கள் சொத்திற்கு செல்ல வேண்டும் என்று சொன்னால் சரியல்ல எனக்கு வேறு வழி உள்ளது. 1 ஆம் பிரதிவாதி உடல்ஊனமுற்றவர் அவரால் தனியாக நடக்க இயலும். அவர் ஊன்றுகோல் வைத்து நடப்பார். அவருக்கு கண்பார்வை குறைபாடும், காதுகேளாமல் உள்ளாரா என்றால் இல்லை. 2 ஆம்பிரதிவாதி அவரது மனைவி. 1 ஆம் பிரதிவாதிக்கும் 2 ஆம் பிரதிவாதிக்கும் ஊனத்தினால் பிரச்சனை இருந்து வந்தது என்று சொன்னால் எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதியும் 2 ஆம் பிரதிவாதியும் பிரிந்து தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. 2 ஆம் பிரதிவாதியுடன் நீங்கள் கூட்டு வைத்துக்கொண்டு நயவஞ்சகமாக தாவா சொத்தை அபகரிக்க முயன்று வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

2 ஆம் பிரதிவாதி அமுதா1 ஆம் பிரதிவாதியான தனது கணவரை உங்களிடம் கடன் வாங்கித்தருவதாக ஆசை வார்த்தை கூறி அழைத்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. உங்களிடம் கடன் பெறுவதற்காக 1 ஆம் பிரதிவாதி அடமானப்பத்திரம் எழுதிக்கொடுப்பதை நம்பி 1 ஆம் பிரதிவாதிக்கு கண்கள் தெரியாததால் அவர்களிடமிருந்து கிரையப்பத்திரத்தில் கையொப்பம் பெற்றுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதிக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. அவர் மது அருந்துவார் நீங்கள் அவரை மது அருந்த வைத்து 1 ஆம் பிரதிவாதியிடமிருந்து கிரையப்பத்திரத்தில் கையொப்பம் பெற்றுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 3 ஏக்கர் 5 செண்ட் விஸ்தீரணம் கொண்டது. மொத்தம் சொத்தினையும் 16 லட்ச ரூபாய்க்கு கிரையம் பேசினேன். நீங்கள் விலை பேசிய சமயத்தில் ஒரு ஏக்கரே 15 லட்ச ரூபாய் போகும் என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் தான் 8 ஆம் பிரதிவாதி கிரையம் பெறும்போது மொத்த சொத்தினையும் 45 லட்ச ரூபாய்க்கு கிரையம் பெற்றுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை 1 ஆம் பிரதிாவதி சுயநினைவு இல்லாத சமயத்தில் 1 ஆம் பிரதிவாதியிடமிருந்து கையொப்பம் பெற்றுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரைய ஆவணம் 1 ஆம் பிரதிவாதியால் கிரையம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஏற்பட்டது அல்ல என்று சொன்னால சரியல்ல. 1 ஆம் பிரதிவாதியின் ஊனத்தையும், அவர் மதுப்பழக்கத்திற்கு அடிமையானதை வைத்து நீங்கள் வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1 ஆம் பிரதிவாதியிடம் கையொப்பம் பெற்றுள்ளீர்கள் என்று சொன்னால்

சரியல்ல. சொத்து சுவாதீனம் நீங்கள் எந்த காலத்திலும் இருந்தது இல்லை என்றும் தாவா சொத்தில் சுவாதீனம் உங்களுக்கு கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரயில்ல. பிரதிவாதியிடம் பணம் கிரையத்தொகையை கொடுத்துள்ளேன். அந்த தொகையை பிரதிவாதி தபால் நிலையத்தில் 10 வருடம் 4 மாதங்கள் வைப்பீடு செய்து வைத்துள்ளதாக அவர் என்னிடம் கூறினார் அதனை நான் கிரைய ஆவணத்திலும் குறித்துள்ளேன். தபால் நிலையத்தில் வைத்த ஆவணம் என்னிடம் இல்லை. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 2 ஆம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு நான்தான் வைப்பீடு செய்தேன் என்று சொன்னாலும் 2 ஆம் பிரதிவாதி பெயர் கார்டியனாக காட்டப்பட்டுள்ளது அதனால் தான் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னாலும் வா.சா.ஆ.2 ஆவணத்தை உண்மை ஆவணம் என்று பிரகடனப்படுத்த 1 ஆம் பிரதிவாதிக்கு தெரியாமலேயே 2 ஆம் பிரதிவாதி ஆலோசனையின் பேரில் அவ்வாறு வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னாலும் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அசல் ஆவணங்கள் அனைத்தும் 2 ஆம் பிரதிவாதி 1 ஆம் பிரதிவாதிக்கு தெரியாமல் உங்கள் வசம் ஒப்படைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கிரையம் பெற வேண்டி இருந்திருந்தால் அதற்கான வில்லங்க சான்றிதழை பார்த்திருப்பீர்கள் என்று சொன்னாலும் 3, 4 பிரதிவாதிகளிடம் ஈட்டு அடமானக்கடன் பதிவாகியுள்ளதை தெரிந்து வைத்திருப்பீர்கள் என்றால் எனக்கு 3, 4 பிரதிவாதிகளிடம் அடமான வைத்த விவரம் தெரியும். வாதி 3, 4 பிரதிவாதிகளிடமிருந்து வாங்கிய கடனை கிரையம் வாங்குவதற்கு

முன்னர் வாதி அதை செலுத்தவில்லை என்று சொன்னால் அது பற்றி வா.சா.ஆ.2 ஆவணத்தில் வாதி அதனை அடமானக்கடனை அடைக்க வேண்டும் என்று குறிப்பு உள்ளது. குறித்துதான் கிரையப்பத்திரம் வா.சா.ஆ 2 ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது. 1ஆம் பிரதிவாதி அந்த கடனை அடைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் அடைத்தீர்களா என்றால் 3, 4 பிரதிவாதிகள் அதனை வாங்க மறுத்துவிட்டார்கள். உண்மையில் அடமானக்கடன் பற்றி உங்களுக்கு தெரியுமானால் மைனர்கள் பெயரில் தொகையை வைப்பீடு செய்ததற்கு பதிலாக 3, 4 பிரதிவாதிகளின் கடனை அடைத்திருப்பேன் என்றும் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இதுநாள்வரையிலும் 3, 4 பிரதிவாதிகளுக்கு செலுத்த வேண்டிய கடனை அடைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல அந்த தொகையை நீதிமன்றத்தில் செலுத்தியுள்ளேன். 3, 4 பிரதிவாதிகளுக்கு கொடுக்க வேண்டிய கடனை 1ஆம் பிரதிவாதி அடைத்து செல்லு ரசீது பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி உரிய பிரதிபலனை பெற்றுக்கொண்டு தாவா சொத்தினை 8 ஆம் பிரதிவாதிக்கு விற்று விட்டார் என்று சொன்னால் சரியல்ல. தற்போது வழக்கு சொத்து 8 ஆம் பிரதிவாதியிடம் தான் சுவாதீனத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் கடனை அடைப்பதற்கு எப்போதும் தயாராக உள்ளேன் என்று பொய்யாக கூறுகிறீர்கள் என்றால் அந்த கடன் தொகையை நீதிமன்றத்தில் வாதி செலுத்தியுள்ளார். 06.05.2020 தேதியில் வா.சா.ஆ.2 பத்திரம் ஆன தேதியிலிருந்து வாதி சுவாதீனத்தில் உள்ளார். என் தாயார் ஒரு வருடம் அனுபவித்துள்ளார். ஜுலை 2021 ல்

8 ஆம் பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமித்துக்கொண்டார். 8 ஆம் பிரதிவாதி அத்துமீறி நுழைந்துவிட்டார் என்று காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளீரா என்றால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். 2 ஆம் பிரதிவாதி உங்களுடன் கூட்டணியில் இருப்பதால் தான் இந்த வழக்கில் நீதிமன்றத்தில் தாவாப்படி தீர்ப்பாக அவருக்கு ஆட்சேபனை இல்லை என்று எழுத்துமூலமாக ஒப்புதல் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. 06.05.2020 அன்று கிரையம் மறுக்கப்பட்ட பிறகு நீங்கள் 8 ஆம் பிரதிவாதி கிரையம் பெறும்வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல வாதி மாவட்ட பதிவாளரிடம் மனு தாக்கல் செய்தும் அதற்கு மேல் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார். வா.சா.ஆ.2 ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய வரும்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினீர்களா என்றால் 1 ஆம் பிரதிவாதியை அனுப்பினார்களா என்றால் 1 ஆம் பிரதிவாதி எங்களுக்கு பதிவு செய்து தர சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தார் ஆகையால் 1 ஆம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பப்படவில்லை. சார்பதிவாளர் அலுவலகத்தில்தான் அறிவிப்பு அனுப்பினோம். 1 ஆம் பிரதிவாதி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்த சிசிடிவி புட்டேஜினையும் வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். 15.06.2020–ல் தான் வா.சா.ஆ.8 வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளீர்கள் என்றும் நீங்கள் நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. கிரையப்பத்திரத்தை வா.சா.ஆ.2 ஆவணத்தை பதிவு செய்து கொள்ள நீர் எந்தவொரு

நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் முத்திரைத்தாள் மற்றும் பதிவுக்கட்டணம் 1,75,200/– ரூபாய் சார்பதிவாளர் அலுவலகத்தில் செலுத்தியுள்ளேன். 06.05.2020 அன்றே மேற்சொன்ன தொகையை நீங்கள் செலுத்திவிட்டீர்கள் என்று சொன்னால் சரிதான். 06.05.2020 க்கு மேல் 15.06.2020 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ரூ.71,735/– யை 06.05.2020 அன்று ரொக்கமாக 1 ஆம் பிரதிவாதியிடம் கொடுத்ததாக கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. 8 ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை ரத்து செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வாதி கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**அ.வ.எண்.199/2021**
**வா.சா.2 : செந்தில்**
**தேதி : 22.08.2025**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் கட்டிட மேஸ்திரி. வாதியை எனக்கு 25 வருடங்களாக தெரியும். 1 ஆம் பிரதிவாதிதான் கிரையப்பத்திரத்திற்கு சாட்சியாக என்னை அழைத்தார். 1 ஆம் பிரதிவாதி கோகுலகண்ணன் வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையம். 1 ஆம் பிரதிவாதி கோகுலகண்ணன் வா.சா.1 சிவக்குமாரிடம் கடன் பெற்றுள்ளாரா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் 3 ஏக்கர் சொச்சம். முத்திரைத்தாளை யார் வாங்கினார்கள் என்றால் முத்திரைத்தாளை எழுதி டைப் அடிக்கப்பட்டு அதனை 1 ஆம் பிரதிவாதி படித்துக் காண்பித்தார். வா.சா.ஆ.2 கிரைய சாசனத்தை எங்கு வைத்து யார் எழுதினார்கள் என்றால் கம்ப்யூட்டரில் டைப் செய்து கொண்டு வந்தார்கள் என்பதுதான் எனக்கு தெரியும். 1 ஆம் பிரதிவாதி கோகுலகண்ணன் வீட்டில் அவரது தந்தை காலத்தில் நான் கட்டிட வேலைகள் செய்துள்ளேன். நான் நீதிமன்றத்திற்கு வா.சா.1 சிவக்குமாருடன் வரவில்லை. தனியாகத்தான் வந்தேன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் நான் சாட்சியாக வாதி மணிமேகலை வீட்டில் கையெழுத்து செய்தேன். கோகுலகண்ணனும் வாதி மணிமேகலை வீட்டில்தான் வா.சா.ஆ.2 ஆவணத்தில் கையெழுத்து செய்தார். வா.சா.ஆ.2 ஆவணத்தில் என்னுடன் மற்றொரு சாட்சியாக கையெழுத்து செய்தவர் வா.சா.1 சிவக்குமார். வா.சா.ஆ.2 கிரைய

ஆவணம் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றோம் சார்பதிவாளர் அதனை பதிவு செய்யவில்லை. எதனால் மறுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தை கிரையம் ரூபாய் 16 லட்சத்திற்கு பேசப்பட்டது. 06.05.2020 தேதியன்று பணம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் 2 நாட்களுக்கு முன்பாக காசோலை வாதி மணிமேகலை கொடுத்தார். வா.சா.ஆ.2 ஆவணம் பற்றி எதுவும் உங்களுக்கு தெரியாது என்றும் வா.சா.1 சிவக்குமார் உங்களுக்கு தெரிந்தவர் என்றும் அவரிடமிருந்து பணத்தை பெற்றுக்கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.